1969 மார்ச் 1]

(உ) இந்தத் தீ விபத்தினால் மீனவர்களுக்கு ஏற்பட்ட விரயம் ஏறக்குறைய ரூ. 1,71,000 (ஒரு லட்சத்து எழுபத்தோராயிரம்) என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்.—சார், அப்படித் தற்செயலாக ஏற்பட்ட இந்த தீ விபத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு அரசாங்கம் கொடுத்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களுக்கு எரிந்து போன குடிசைகளை கட்டிக்கொள்வதற்கும் துணிமணிகள் வாங்குவதற்குமாக ரூ. 5,490 நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 114, 115, 116 ஆகியவை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோள்படி ஒத்தி வைக்கப்படுகின்றன.

குடுமியாமலை விவசாயப் பண்ணை.

*117 வின—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) குடுமியாமலையில் அமைக்கப்பெற்ற விவசாயப் பண்ணைக்கு ஆன மொத்தச் செலவென்ன?

(இ) இப்பண்ணையின் சிறப்புக்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இந்த வேளாண்மைப் பண்ணைக்கு 30—6—1968 வரையில் ரூ. 2,90,832 செலவிடப்பட்டுள்ளது. இதில் ரூ. 2,57,132 முதலீடு மூலதனமாகும்.

(இ) இந்தப் பண்ணையில் அடுத்தடுத்துள்ள 3,300 ஏக்கர் நிலம் உள்ளது. இது செம்மண் நிலம். இந்த நிலத்தைப் பயிரிடுவதற்கேற்றவாறு எளிதில் பண்படுத்த முடியும். இங்கு தண்ணீரும் குறைந்த ஆழத்திலேயே கிடைத்துவிடுகிறது. இப் பண்ணை, பொருளாதார அளவில், பின்தங்கிய பகுதியாகிய புதுக்கோட்டை கோட்டத்தில் அமைந்துள்ளது. டிராக்டர், விசையேற்றம் போன்ற யந்திர சாதனங்களைக் கொண்டு பயிரிடும் பண்ணையாக இது மேம்படுத்தப்பட்டு வருகிறது. உழவர்களுக்கு இது பரிசோதனை கட்புல விளக்கப் பண்ணையாகச் செயல்படவேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது. அரசாங்கப் பண்ணை ஒன்றில் முதன் முறையாக இப்பண்ணையில் தான் நீர் தூவும் பாசன முறை (Sprinkler Irrigation system) செயலாக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பண்ணையிலே அதிகமாக ஈடுபட்டிருந்தார்கள். எனவே, இந்தப் பண்ணைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பண்ணை என்று பெயரிட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்தப் பண்ணையை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் தீவிர முயற்சி எடுத்து அந்தப் பண்ணை நல்ல முறையிலே இயங்குவதற்கு பாடுபட்டார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். ஆகவே அந்த பண்ணைக்கு அறிஞர் அண்ணா வேளாண்மைப் பண்ணை என்று பெயரிடப்பட வேண்டுமென்று திருச்சி வேளாண்மைக் கழகச் செயளாளரிடமிருந்து கோரிக்கை வந்தது. சம்பந்தப்பட்டவர்கள் அதை திருச்சி கலெக்டருக்கு சிபாரிசு செய்துள்ளார்கள். கலெக்டர் அதை அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்துள்ளார்கள். அரசாங்கம் பரிசீலித்து உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு அந்தப் பண்ணைக்கு அந்த பெயரிட முன்வரும்.

THIRU R. VIJAYA RAGHUNATHA THONDAIMAN: Sir, there was a proposal to start this Farm with the aid of the Russian Government. I would like to know the reason why that proposal has been dropped?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த மாதிரியான் முயற்சி எதுவும் இடையாது. மத்திய அரசாங்கம் 5,000 எக்கர் உள்ள ஒரு பெரிய பண்ணையை தமிழக அரசு நிறுவி, அதை 20, 30 ஆண்டுகாலத்திற்கு குத்தகைக்கு மத்திய அரசு விடவேண்டுமென்று கேட்டார்கள். அப்படி கேட்டுக்கொண்டதால் தமிழக அரசு ஆயிரம் எக்கரை நல்ல சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். நல்ல தரமான சிறு தானிய வகைகளையும், காய்கறி வகைகளையும், பழ வகைகளையும் அந்த பண்ணையிலே பயிரிடக் கூடிய சூழ்நிலை இருப்பதாலே நமது அரசே அதை எடுத்து நடத்துவது என்று முடிவெடுத்தது, அதை நிறைவேற்றும் வகையில் விதை வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ரஷிய அரசாங்கத்திடமிருந்து அங்கத்தினர் சொன்னமாதிரி உதவி பெற்று ஆரம்பிப்பது குறித்துத் தகவல் எதுவுமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, குடுமியாமலையில் அமைக்கப்பட்ட விவசாயப் பண்ணையைப் போல தமிழகத்தில் வேறு இடங்களில விவசாயப் பண்ணைகள் அமைக்க அரசு கருதியுள்ளதா, திட்டமிட்டுள்ளதா? ஆமெனில் எங்கெங்கே?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

Freezing Unit at Ennore

* 118 *Q*.—THIRU A. M. RAJA:
THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR:
THIRU N. S. V. CHITHAN:

Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the freezing unit at Ennore has been completed;

(*b*) if so, the actual cost of execution; and

(*c*) the capacity of the plant?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி. (அ) & (இ); சில சிறு இனங்களைத் தவிர, எண்ணூரர் மீன் உறை பிரிவு வேலை முடிவடைந்தள்ளது. எல்லாப் பணிகளும் முடிந்து ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் கொடுத்தப் பின்னர்தான் உண்மையில் ஏற்பட்ட செலவு தெரிய வரும்.

(உ) பனிக்கட்டி உற்பத்தி—

பனிக்கட்டித் துண்டுகள்—நாள் ஒன்றுக்கு 3 மெட்ரிக்டன்;
குளிர்ப்பதன மீன் சேமிப்பகம்—7½ மெட்ரிக் டன்,
உறைநிலைச் சேமிப்பகம்—50 டன்;

உறைநிலைத் திறன்—நாள் ஒன்றுக்கு 2½ டன் முதல் 3 டன் வரை.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, நிறையச் செலவு செய்து கட்டப்பட்ட இந்த உறை பதனப் பிரிவின் மூலம் மீன், இரால் இவைகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? எந்த நாட்டிற்கு? இதன்மூலம் ஈட்டப்படும் வெளிநாட்டு செலாவணி எவ்வளவு என்பதை அறியலாமா?